# வணிகப் பதிவின் முக்கியத்துவம்

தனிநபர் உரிமையின் கீழ் அல்லது பங்காளர்களுக்கிடையில் நடத்தப்படும் கூட்டாண்மை வணிகமொன்றைப் பதிவு செய்வதற்கான சட்ட ரீதியான மூலத்தை 1918 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வணிகப் பெயர்கள் கட்டளைச் சட்டம் வழங்குகின்றது. அதில் விவரிக்கப்பட்டுள்ளவாறு, தனிநபர் அல்லது கூட்டாண்மை வணிகப் பதிவுகளை, வணிகம் அமைந்துள்ள கிராம நிலதாரி பிரிவுக்குரிய பிரதேச செயலகத்தின் மூலம் மேற்கொண்டு கொள்ள முடியும். அதற்கான நடைமுறை பின்வருமாறு அமையும்:

வணிகம் ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 14 நாட்களுக்குள், அருகிலுள்ள பிரதேச செயலகத்திற்குச் சென்று, வணிகப் பெயர் பதிவுப் பிரிவிலிருந்து வணிகப் பதிவுக்குரிய விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு, நீங்கள் எழுத்து மூலமான கோரிக்கை கடிதம் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன், உரிய கிராம நிலதாரி பிரிவுக்குரிய கிராம நிலதாரியிடம் இருந்து, வணிகமொன்று நடத்தப்பட்டு வருகின்றது என்பதற்கான சான்றிதழையும் அக்கடிதத்துடன் இணைத்து உரிய பிரதேச செயலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

இவ்வாறு கிராம நிலதாரியிடமிருந்து சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கான பிரதான காரணம், ஒரு நபர் மோசடியான முறையில் வணிகமொன்றை நடத்தாமலேயே, தனது பெயரில் வணிகம் ஒன்று இருப்பதாகக் கூறி போலிப் பதிவொன்றை மேற்கொள்வதைத் தடுத்துக் கொள்வதற்கேயாகும். பிரதேச செயலகத்துடன் நேரடியாகப் பணியாற்றும் அரசாங்க அதிகாரி கிராம நிலதாரி ஆவார். அவரால் உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்படும் ஆவணத்தின் அடிப்படையில், பிரதேச செயலகத்தினால் பதிவுக்குரிய விண்ணப்பப் படிவம் வழங்கப்படும்.

அதன்பின்னர், அந்த விண்ணப்பப் படிவத்தை முறையாகப் பூர்த்தி செய்து, கிராம நிலதாரி மூலம் சான்றளித்து, பிரதேச செயலகத்தின் வணிகப் பெயர் பதிவுப் பிரிவில் ஒப்படைக்க வேண்டும். இங்கு குறிப்பிட வேண்டிய ஒரு முக்கிய விடயம் என்னவென்றால், இதற்கு முன்னர் எவரேனும் பதிவு செய்துள்ள வணிகப் பெயரை உங்களது பெயரில் மீண்டும் பதிவு செய்வதற்காக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதாகும்.

உதாரணமாக, "சந்தகலும் பிரிண்ட் ஹவுஸ்" (Sandakalum Print House) என்ற பெயரைப் பயன்படுத்தி யாராவது ஒரு வணிகத்தைப் பதிவு செய்து நடத்தி வருகிறார் எனின், அதே வணிகப் பெயரைப் பயன்படுத்தி மற்றுமொருவர் வணிகமொன்றைப் பதிவு செய்து நடத்த முடியாது. சட்டம் அவ்வாறான அனுமதியை வழங்குவதில்லை என்பதுடன், ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு பெயர் உங்களது வணிகத்திற்கும் இடப்பட்டிருந்தால், அது பதிவிற்காக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. எனவே, வணிகப் பெயரைத் தீர்மானிக்கும் போது, அது தற்போது பயன்பாட்டில் இல்லாத ஒரு வணிகப் பெயராக இருக்க வேண்டும்.

யாராவது ஒருவர் வணிகப் பெயரொன்றுடன் வணிகத்தை நடத்தி வந்தாலும், அது பதிவு செய்யப்படவில்லை எனின், மேலும் அந்த வணிகத்தின் பெயர் அதனை நடத்துபவரின் முழுப் பெயராகவும் இல்லை எனின், அந்தப் பெயரை மற்றுமொருவர் தனது வணிகப் பெயராகப் பயன்படுத்த முடியும். அத்தகைய சூழ்நிலையில், அந்த வணிகம் வணிகப் பெயர் பதிவுப் பட்டியலில் இல்லாத ஒரு வணிகமாக மாறுவதால், அந்த இரு வணிகர்களில் பதிவிற்கான ஆவணங்களை முதன்முதலில் சமர்ப்பிக்கும் நபர், அது தனது வணிகம் என்பதை உறுதிப்படுத்தி பதிவை மேற்கொண்டு கொள்ள முடியும்.

அப்போது, அதே பெயரைப் பயன்படுத்தி முன்னர் வணிகத்தை நடத்தி வந்த நபர், அதனைப் பதிவு செய்யாத காரணத்தினால் சட்டவிரோதமாக வணிக நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும்

ஒருவராக மாறிவிடுவார். எனவே, ஒரு நபர் வணிகத்தை ஆரம்பித்து 14 நாட்களுக்குள் தனது வணிகப் பெயரைப் பதிவு செய்து கொள்வதன் மூலம் இந்த அசௌகரியத்தைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

மேற்கூறப்பட்டவாறு உரிய பிரதேச செயலகத்தில் தேவையான ஆவணங்களை ஒப்படைத்த பின்னர், பதிவுப் கட்டணமாக ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்த வேண்டி ஏற்படும். அந்தத் தொகையைச் செலுத்திய பின்னர், வணிகப் பெயர் பதிவுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளலாம். அதன் பின்னர், அந்தச் சான்றிதழை வணிகம் நடைபெறும் இடத்தில் தெளிவாகத் தெரியுமாறு தொங்கவிட வேண்டும்.

பல வர்த்தகர்கள் இந்த வணிகப் பதிவின் முக்கியத்துவத்தை அறியாததால், தங்களது வணிகங்களைப் பதிவு செய்வது குறித்து அக்கறை காட்டுவதில்லை. இது அவர்கள் தங்களது வணிகத்தை விரிவுபடுத்துவதற்காக இருக்கும் வழியைத் தாங்களாகவே அடைத்துக் கொள்வதாகும். வணிகத்தை அபிவிருத்தி செய்வதற்காக வங்கி வதவிகளைப் (கடன்களைப்) பெற்றுக்கொள்ளும் போதும், வணிகம் பதிவு செய்யப்பட்டுள்ளதா இல்லையா என்பதே அவர்கள் அவதானிக்கும் பிரதான காரணியாகக் காணப்படுகின்றது.

அரசாங்கத்தின் மூலம் சிறுதொழில் முயற்சியாளர்களை மேம்படுத்துவதற்கான திட்டங்களின் கீழ், அவர்களுக்கு நிதி உதவிகள் அல்லது பொருள் உதவிகளை வழங்கும் போதும், உரிய பலனைச் சரியான நபருக்கு வழங்குவதற்காக வணிகம் பதிவு செய்யப்பட்டுள்ளதா இல்லையா என்பது ஆராயப்படுகின்றது. எனவே, எவ்வகையான வணிகத்தை நடத்தி வந்தாலும், அதனைப் பதிவு செய்து முறையான வடிவில் நடத்திச் செல்வது மிகவும் முக்கியானதாகும். அதன் மூலம் வர்த்தகர் பெருமளவிலான நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.